மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திரைப்பட சுவ ரொட்டி ஒன்றைப் பற்றி குறிப்பிடுகிறீகள் என்று நினைக்கிறேன் சென்சார் போர்டு மத்திய அரசி சம்மந்தப்பட்டது. மனித டைய பகுத்தறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞான அடிப்படையில் அப் படிப்பட்ட படங்கள் தகுதியானவை என்று நினைத்துத்தான் அனுமதித்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சனை யாகாது.

இ. அரசு பேருந்தில் ஜாஸ் இசை ஒலிபரப்பு பெறுவது.

திரு. உ. சுப்பிரமணியன் மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடமிருந்து பாதுகாப்பு கோருகிறேன், நேற்று இரவு திருச்சியிலேயிருந்து சென்னைக்கு சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸிலே வந்தேன். சூப்பர் டீலக்ஸ் பஸ்கள் சாய்ந்து உட்காரு வதற்கு சௌகரியமான வண்டி, அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இரவு முழுவதும் தூங்கவிடாமல், ஜாஸ் மியூசிக்கை உரக்க ஒலிபரப்பிக் கொண் டிருந்தார்கள். யாருமே தூங்க முடியவில்லை. அதை மாற்றுவ தற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரயாணிகள் அது போன்ற வண்டிகளில் ஏறும்போதே ஸ்பீக்கர் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டுதான் ஏறுகிறார்கள். அந்த வகையில் அது வரவேற்கப்பட்ட முறை. உறுப்பினர் அவர்களுக்கும் இசையில் பெரு விருப்பம் இருந்தாலும், ஜாஸ் மியூசிக் பிடிக்க வில்லையோ என்னவோ தெரியவில்லை.

(முற்பகல் 9-50)

3 ஒத்திவைப்பு தீர்மானம்.

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது
கூட்டுறவு கடன்களை வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், எஸ், ஆண்டித்தேவர்: சோ. அழகர்சாமி, இரா கருப்பைய்யா, என்.ஏ. பூங்காவனம், ஏடி. கருப்பைய்யா, ரா கிருஷ்ணன், என். வரதராசன், எம். செல்லமுத்து, எம். பழனி வேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் இரெ. இராசமா ணிக்கம் ஆகியோர்.

''தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட் டுள்ள இந்த நேரத்தில் கூட்டுறவு வங்கிகளும் நிலவள வங்கிகளும் விவசாயிகள் வாங்கியுள்ள பழைய கடன் பாக்கிகளுக்காக ஜப்தி நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்தி வைக்க வேண்டுமென்பது பற்றி